# அரங்கு கண்ட துணை வேந்தர்



மணிவிழாக் காணும்
கலாநிதி சு. வித்தியானந்தன்

ஏ. ரீ. பொன்னுத்துரை

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்ற வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No.................. Acc. No..................

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
PERADENIYA

## NOTICE TO BORROWERS

This book is the property of the University Library, and any unauthorised possession of it outside the regulations governing borrowing facilities is a serious offence Borrowers are requested to adhere strictly to the rules and regulations relating to borrowing detailed in the Library Handbook.

Borrowers are kindly requested to keep the books clean, and to refrain from turning down leaves or making pencil or other marks upon them. They will be held responsible for the condition of any book returned by them and they should, therefore, report any damage or other injury to the books to the Library Assistant at the Counter before borrowing them.

(20345) 1/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கு கண்ட
துணை வேந்தர்

UNIVERSITY OF PERADENIYA
1-8-1992
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No. ......... Acc. No. ..................

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
PERADENIYA

NOTICE TO BO[illegible]

This book is the property of the University [illegible] outside [illegible] in the Library Handbook.

Borrowers are kindly requested to keep the [illegible] and to refrain from [illegible] books to the Library Assistant at the [illegible] borrowing [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அரங்கு கண்ட துணை வேந்தர்

கலைப்பேரரசு

ஏ. ரி. பொன்னுத்துரை

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்ற வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ் - பல்கலைக்கழகத் துணைவேந்தர்
கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்
மணி விழாவினை முன்னிட்டு,
அரங்கை அணிசெய்த அன்னாரது பணிகளை
அடியொற்றி எழுதப்பெற்றது
இந்நூல்.

— ஏ. ரி. பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
1-8-1992
LIBRARY



# முன்னுரை

மாவை. கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா
**மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்**
நிர்வாகஸ்தர், மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம்

**நா**கரிக இயல்புகள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பரவுவது அவ்வவ் நாட்டின் நாகரிக வாழ்க்கைமுறைகளை அடியோடு மாற்றியமைத்து மனிதசமுதாய வாழ்க்கைச் சிறப்பினை அழிவுப் பாதைக்கு வழிவகுக்குமென ஆன்றோர் கூறுவர். நாடுகள் தத்தம் சூழ லுக்கேற்றவாறு காலநிலை, பண்பாடு, அறிவு, ஆற்றல் ஆதியாம் இயல்புகளுக்கேற்றதான வகையிற்றான் தத்தம் கலை கலாச்சாரங்களை அவர்களுக்கேற்றதான நாகரிக வாழ்வோடு இணைத்துச் செயல்படுகின் றன. ஒரு நாட்டில் சமயப்பற்று, குருவிஸ்வாசம், தாய்தந்தையர்களை மதித்தல் என்பன இருக்க, இன்னொரு நாட்டில் அவை இல்லாதிருக்கும். ஒரு நாட்டில் குளிர் அதிகமாக இருக்கும்; மற்றொரு நாட்டில் பலதாரம் மணக்கும் பண்பாடும் இருக்கும்; இன்னொரு நாட்டில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்றவகையில் மக்கள் வாழ்வு பெற்றிருக்கும். இப்படியே நாட்டுமக்கள் தமது சூழலை முன்வைத்துத் தத்தம் பண்பாடு, கலை கலாச்சாரங்களை நிலைநிறுத்தி அவற்றிற்கேற்றாற்போலவே மனித சிந்தனையையும், வாழ்க்கை முறைகளையும் வகுத்தனர். காலஞ்செல்லச் செல்ல 'அறிவு' என்ற சித்தாந்தம், உலகில் உள்ள கலை கலாச் சாரம் பண்பாடு ஆதியாம் உயரிய தத்துவங்களைக் கலக்கியடித்து, மெய்ம்மையை மறைத்தும் மயக்கியும், கலாச்சாரங்களை ஒரு பண்ட மாற்றுச் சரக்காக்கி அதிலும் வியாபாரத்தன்மையைப் புகுத்தி அழிவுச் சின்னமாக்கியது. 'மேலைத்தேய பண்பாடு கீழைத்தேய மக்களுக்குப் பொருந்துமா' என்று கேட்கும்போது, 'மேலைத்தேய நிர்வாண உடல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞலுக்கு ஆட்டம் என்பவற்றைக் கீழைத்தேய மக்கள் விரும்பி ஆத ரித்து, இரசிக்கவில்லையா' எனப் பதில் கூறி மழுப்பும் கலாவியாபாரிகள் நிறைந்த காலமிது.

உலகில் நாகரிகம் தோன்றிய காலகட்டத்திலிருந்துதான் கலைகளைப் பற்றிய சிந்தனை உண்டானதென மேற்கத்திய அறிஞர்கள் கூறுவர். ஆனால் 'சிவதாண்டவம்' மூலம் கலைகள் பிறந்துவிட்டன. சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பன சிவதாண்டவம் மூலம் உல கிற்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷங்களாகும். இவற்றின்மூலம் மக்கள் அமைதியாகவும், சீராகவும், சமாதானமாகவும், நிறைவுடனும் வாழலாமென்பதற்கு ஆதாரங்கள் பலவுள. சிவாகமங்களில் சிற்பம், ஓவியம், இசை, நடனம் என்பவை அழியாமல் என்றும் உயிர்த்தன்மை பெற்று நிலைத்திருக்கவேண்டிப் பிரார்த்தனைகளும் ஆசீர்வாதங்களும் செய்யப்பட வேண்டும். அவை ஆலயங்கள்மூலம் தினமும் நடை முறைப்படுத்தப்பட்டதிலிருந்து இந்த நுண்கலைகளின் மாட்சிமையின் உயர்வினைக் கூறவும்வேண்டுமா! கீழைத்தேய மக்களின் பண்பாடு முக் கியமாக இந்தியப் பண்பாடு, மேற்கூறிய நுண்கலைகளிலிருந்தே ஆரம்பமாகியது. அதனால் பணம் பொருள் ஏவல் என்பவற்றால் அமைந்துவிடும் வாழ்க்கை நிறைவிலும்பார்க்க நுண்கலைகள் மூலம் எமக்கப்பாற்பட்டதோர் சக்தியிடம் மனம்நாடி அளவுக்கதிகமாக, நிறைவான புனிதவாழ்வை அடையலாம் என்ற முடிவைத் தெய்வீக மக்கள் அனுபவரீதியாகக் கண்டுகொண்டனர். இதற்கு சமயகுரவர்கள் நல்ல சான்றுவர். ஈழநாட்டிலும் கலை கலாச்சாரங்கள் இந்திய கலை கலாச்சாரங்களையே பின்பற்றி வந்தன. இருந்தும் மிலேச்ச நாட்டின் ஊடுருவல் தமிழர் பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றைச் சிதைத்தன. அன்னிய மொழி பயில முனைந்த பல தமிழர்கள் தாய்மொழியான தமிழையே மறந்துவிடவும் முயன்றனர். பலர் மறந்தும்விட்டனர். இவ் வேளையில் ஆலயங்களை மையமாக வைத்து அமைதியாக தர்மவாழ்வை நடாத்திய கிராமிய மக்கள் ஏதோவொரு வகையில் நுண்கலைகளை வளர்த்துவந்தனர். அதனால் புனிதமாக இக் கலைகள் ஏழைமக்களது ஆதரவாலும் ஆற்றல்களாலும், வளர்ச்சிபெற்று வந்தமையை யாரும் மறுக்கமுடியாது. கல்வியுடையோரென மதிக்கப்படுகின்றவர்களும், கலை யைப்பற்றிய நல்ல ஆராய்ச்சியுடையோராய் இருக்கவேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றவர்களும் பொருள்சம்பாதிப்பதிலும், காலவேற்றுமை யாலும் தமது நாட்டின் சிறந்த நுண்கலைகளினிடத்தே ஒருவித அவமதிப் பையும் அக்கறையில்லாத்தன்மையையும் கொண்டிருந்தனர். அதோடு மிலேச்சவாதிகளின் அரவணைப்பும், கல்விச் செருக்கும் இதற்கு உறுதுணை தந்தன. பரதநாட்டியத்தை 'பாலே' (Ballet) நடனபாணியாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் எனக் கூறும் இக் கல்விமான்கள், சமயங்களிலேயே வேறுபாடு இருக்கக்கூடாதெனவும் வாய் கூசாது கூறுவர். ஐரோப்பிய நாகரிகம் தமிழ்நாட்டு நாகரிகத்தை முற்று முழுதாக மாற்ற எடுத்த முயற்சி, கிராமிய ஏழை மக்களது கடும் உழைப்பால் தடுத்து நிறுத்தப்பட்டதெனவும் கூறலாம். இருபதாம் நூற்ருண்டின் பிற்காலத்தில் ஈழநாடு சுதந்திரம் அடைந்ததும் கிராமிய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்த கல்விமான்கள் நுண்கலைகளை அதன் பிறப்பு எத்தகையது என்று ஆராயாது, அந்த பிறப்பொழுக்க மார்க்கத்தில் வைத்துத்தான் இத் தெய்வீகக் கலைகளை வளர்க்க முற்பட்டனர். ஐரோப்பிய நாகரிகம் இதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

அக்காலத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை முன்வைத்து தெல்லிப்பழை, மயிலிட்டி, அளவெட்டி, காங்கேசன்துறை, இணுவில், ஏழாலை கிராமங்கள் இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆதியனவற்றை எப்படி அழகாக அதன் பண்பாடு குலையாமல் வளர்த்தனவோ, அதே போல ஒரு மன்றம் அமைத்து இவற்றினை வளர்த்துவிடவேண்டுமென எண்ணி 'மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம்' என்ற உயரிய கலா மன்றம் 1955ஆம் ஆண்டளவில் ஆரம்பமானது. தமிழ் மக்கள் தந்த ஆதரவோ மகாதிருப்தி; கிராமியக் கலைகளது தொன்மை, அதன் உயர்வு, கீர்த்தி ஆகியவற்றை மக்கள் அறியவும் ஆராயவும் முற்பட்டனர். இதனுல் அக்காலத்தில் இப் பிரதேசங்களில் பவனிவந்த ஐரோப்பிய துள்ளுநடனம், பொப்பிசை இத்தியாதிகள் அசுரவேகத்தில் வந்த வழிபார்த்து ஓட்டமெடுத்தன. இக் காலகட்டத்தில் எமது தெல்லிப்பழையூர் வாசியும் மாவிட்டபுரம் கலாச்சாரத்தில் இரண்டறக் கலந்த வரும் கல்வித்துறையில் அபார அபிவிருத்திகளுக்கு உறுதுணை தந்தவருமான ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்களது மகன் அப்போதைய பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் பல்கலைக்கழக மாணவ மாணவிகளைக்கொண்டு ஆட்டுவித்த ஆடல் கூத்து ஈழநாட்டில் மக்களிடையே ஒரு புது உணர்ச்சியையும் உந்து சக்தியையும் புகுத்தியது. இதிகாசங்களை வெகு இலகுவாக ஆட்டத்தின்மூலம் ''இதுதான் அது'' என குழந்தைகள் முதல் வயோதிபர் ஈறுக சொற்ப நேரங்களில் விளங்குமளவிற்குச் செயற்படுத்திவிட்டனர். இதனுல் அக்காலத்தில் மிஞ்சியிருந்த 'பாலே' நடனக்காரரும், துள்ளு ஆட்ட பொப்பிசைக்காரரும் யாருக்குமறியாமல் அஞ்ஞாதவாசம் செய்ய முற்பட்டு இன்று அடியோடு மறைந்துவிட்டனர். ஆகவே எமது சூழலுக்கேற்றதாக, எமது வாழ்க்கைக்கு உகந்ததாக, உயரிய நோக்குகளை அடையவேண்டுமாயின் நாம் எமது கலை கலாச்சாரங்களையே, அன்று இருந்ததுபோல. எமது சிவபிரானது சிவாகமங்கள் வழிகாட்டியபடி நாம் செயல்படவேண்டியது மிகமிக முக்கியமாகும். இந்தரீதியிற்தான் 'முத்தமிழ்க் கலைமன்ற'மும் தோன்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம்' ஆரம்பித்த காலத்திலிருந்து இயல் இசை நாடக வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளை யாவரும் அறிவர். இலக்கிய விழாக்கள், கருத்தரங்குகள், இசை விழாக்கள், இசை வகுப்புகள், நாடக விழாக்கள், நாடக கருத்தரங்குகள், நடனப் பயிற்சி ஆதியாம் துறைகளிலும் ஆற்றிவரும் பணி அதிசிறந்தவை. இந் நிகழ்ச்சிகளால் பயனுள்ளவையும் பயன்பெற்றவையும் ஏராளம் ஏராளம். நாடகத்துறையில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி, நாடகப் பேராசானை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் உடல் பொருள் ஆவியின் செயற்பாடாகவே கருதமுடியும். தனக்கென வாழாது நாடகக் கலைக்காக வாழும் இப் பெருமனுஷன் தமிழன் பண்பாடுகளைத் தழும்ப விடாது பாரம்பரிய கலை கலாச்சாரங்களை முன்னிறுத்தி நாடகங்களை நடத்தினுரெனில் அவரது உள்ளம் அதற்காக எத்தகைய இன்னல்களுக்காளாகியிருக்கும் என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். ஊண் உறக்கம் இல்லாது எமது மன்ற நாடகத்துறைக்குத் தம்மையே அர்ப்பணித்த கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை கலைத்துறையிலுள்ள மற்றவர்களையும் மதித்து அவர்களையும் அவ்வத்துறைகளில் ஆற்றுப்படுத்தி ஆதரவு தரும் கலைஞராகவும் பவனிவந்துள்ளார்.

உபவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள் இயல் இசை நாடகத் துறையின் வளர்ச்சிக்கு அளித்த ஆதரவும், செயற்பாடும் அளவுக்கதிகமானவை. பாரம்பரியங்களுக்கு அழகூட்டி, புதுமெருகூட்டி, இன்னும் பலகாலம் நிலைதடுமாருமல் நிலைத்திருக்கவேண்டுமென்ற சிந்தனைக் கமைவாக இப் பெரியார் கலைத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டும் சேவைகளும் உண்மையில் மகத்தானவை. இந்த உத்தம சேவையைத் துணிந்து நடாத்திய உபவேந்தர் வித்தியானந்தன் அவர்களது மணிவிழாவினை நினைத்து வெளியீடுசெய்யும் இந்நூல் கலைக்கே உரித்தான கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் சிந்தனையில் எழுந்த ஊற்ருகும். இனம் இனத்தைச் சாரும் என்பது ஒரு பழமொழி. அதே போல் கலைவாணனுக்கு கலைஞன் தரும் ஒரு காணிக்கையாக இந் நூல் மணம் வீசுகிறது. கலைக்கூடமான 'முத்தமிழ்க் கலைமன்றம்' மூலமாக வெளிவரும் இந்நூல் பல்லாயிரம் கலைஞர்களின் ஆதரவுடன் இயங்கும் மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றம் மூலம் வெளிவருவதாஞல், இந் நாட்டுக் கலைஞர்களும் அக் காணிக்கைக்குக் கெளரவம் கொடுத்து உபவேந்தர் சு. வித்தியானந்தனை வாழ்த்துகிருர்கள் என்பதே அர்த்தமாகும். நிறைந்த திருவருட் செல்வங்களுடன் உபவேந்தர் சு. வித்தியானந்தன் இனிது வாழவேண்டுமென எமது பிரார்த்தனை என்றும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# சூழலில் முகிழ்ந்த கலையுணர்வு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியை அணி செய்து, உயர் ஊஞ்சலாடும் கலாநிதி பேராசிரியர் சு. வித்தியானந்த னவர்களிடம் கலையுணர்வு கட்டுமீறிப் பிரவாகிக்கிறதே? அவ்வுணர் வோட்டம், சில கட்டங்களில் சரித்திரம் சமைக்குமளவுக்கு, திருப்பு முனைகளாகத் திகழ்கின்றனவே? என்ற எண்ணங்கள் உள்ளத்தில் இழையோடும் வேளை அன்னார் பிறந்து வளர்ந்த சூழல் என்முன் பரந்து விரிந்து காட்சி தருகிறது. பள்ளிப்பருவத்தில் துள்ளி விளையாடிய துணைவேந்தர், மாவைப்பதியின் தேரோடும் வீதிகளில் மென்னடை பயில்கிறார். இல்லத்தில் இருந்து நாற்றிசையும் நடமாடுகிறார்.

வடபால் அமைந்தது தெய்வீகத் திருத்தலமாம் மாவைக் கந்தசுவாமி கோவில். வளமார்ந்து நீண்டுயர்ந்த கோபுரம், மூன்று வீதிகள், பஞ்ச ரதங்கள், முழுமதியன்ன மூர்த்திகரங்கள், கட்டிடக்கலையின் நுட்பதிட் பங்கள் அத்தனையும் அழகொழுகக் காட்சிதரும் அருள்மிகு ஆலயத்தில் கோவிற் கலைகள் மக்கட் கலைகள் ஆதீனகர்த்தாக்களின் அரவணைப்பில் பொலிந்து வளர்கின்றன.

நாதஸ்வரகானம் தினம் தினம் தேனெனப் பாய்கிறது. தஞ்சை மாநகர் இருந்து மாவையில் வதிந்திட்ட இசைவேளாள சமூகம் மரபுவழி நின்று, சுவையாகச் சுத்தமாக, அழகாக, அற்புதமாக இசைமழை பொழிகிறது. ஆடித் திங்களில், மகோற்சவ காலங்களில், அவர்களது கானவெள்ளம் கணீரென ஒலிக்கும். பல்வேறு ராகங்களில் சுரவரிசை களில் ஆலாபனைகளுடன் கலைஞர்கள் வாசிக்க, தவில் வித்துவான் கள் தமது திறமை, வித்துவம் தெறிக்க முழங்குவார்கள். வட்டவடிவில் சுவைஞர் குழாம் தலையாட்டும்; தாளம்போடும்; மெய்மறந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடித் திருவிழா, தேர்த் திருவிழா என்றால் போதும். கிராமங்களில் இருந்து ஐம்பது அறுபது என மேளதாளத்துடன் வரும் ஆட்டக்காவடிகள்; மத்தளம் சல்லரி சலங்கை ஒலியுடன் தாளக்கட்டுக்கு ஆடப்படும் தாளக் காவடிகள், மக்களை மகிழ்விக்கும். மக்களோடு மக்களாய் நெரிசலில்நின்று, பெரிய விழிகளை உருட்டியபடி பரந்த முகத்தில் மகிழ்வுபரவ, மாந்திச் சுவைக்கிறார் அன்று பள்ளிப்பருவத் திருந்த இன்றைய துணைவேந்தர்.

வசந்த மண்டபத்து சித்திரப்பந்தர், பூத்தொடுத்து மாலைகள் கட்டும் புனிதக்கலை, சப்பரம் சாத்துப்படி மணிப்பல்லக்கு, பூம்பல்லக்கு கட்டும் கலை எனப் பல்வேறு கலைகளையும் இரசிக்கிறார் இவ்வாலயத்தில். 'வாழைக்குத்திக் கூத்து' என அழைக்கப்படும் ஆட்டக் கூத்துக்கள் பல, ஆலய வீதியில் விடிய விடிய ஆடப்பட்டதாம். இவற்றைத் தவற விட்டிருப்பாரா? 'இயமன்' பொன்னம்பலத்தை இன்றும் நினைவுகூருகிறார். இத்தகைய ஒரு தனிச்சூழல் உபவேந்தர் உள்ளத்தில் குழந்தைப்பருவத்தில் அவரறியாமலே கலை உணர்வுகளைப் பாய்ச்சியிருக்கலாம். அவர் உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து இயல்பாகவே பதப்பட்டிருக்கலாம்.

மேற்கே நோக்குகிறோம். அதோ அளவெட்டிக் கிராமம். அதனையடுத்துப் பன்னாலை, கொல்லங்கலட்டியாம் கலைபுரக்கும் கிராமங்கள். வீர சைவர்கள் பலர் ஆங்காங்கு வதியும் அளவெட்டியில் பண்ணுடன் பாடப்படும் திருமுறைகள் கேட்கின்றன. நுட்பமாக நுணுக்கமாக உடுக்கடித்துக் கரகமாடும் நற்கலையும் வீர சைவர்களுக்குக் கைவந்த தனிக்கலை. இசைநாடகங்களுக்கும் குறைவில்லையாம் இவர்கள் மத்தியில். பண்ணிசை வளர்ச்சி பன்னாலை கொல்லங்கலட்டி மக்களிடம் ஓங்கிவளர்ந்தது. இவர்கள் சங்கமமும் மாவையில் நிகழ்வதுண்டு.

கிழக்குப்புறத்தே, வறுத்தலைவிளான், கட்டுவனூர் வசந்தன் ஆட்டம், குரும்பசிட்டியூர் கோலாட்டம் கும்மி கூத்து பிரபல்யம்பெற்று மிளிர்ந்தன. தெற்கே மல்லாகம் ஏழாலையில் கோவிற்கலைகள் உன்னதம் பெற்றன. கவி மகாலிங்கசிவம், நவநீதகிருஷ்ண பாரதியார், வித்துவசிரோமணி கணேசையர், மாணிக்கத் தியாகராசர் போன்ற அறிஞர் பெருமக்களினது எழுத்தும், பேச்சும், மூச்சும் அருங்கலைத் திறமையும் இப் பிராந்தியத்தை வளமாக்கி நின்றன.

தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலை (இன்றைய யூனியன் கல்லூரி) ஆங்கிலமும் செந்தமிழும் செழித்திடப் பணிபுரிந்து, மேற்கத்திய நாகரிகத்தின் அம்சங்களையும் அன்றே வளர்த்து நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையடுத்து பாவலர் துரையப்பாபிள்ளை அமைத்த மகாஜனக் கல்லூரி கலைவளர்த்த பெரும்கூடமே. தவிர கிராமப்பள்ளிகள் தோறும் ஆண்டுக்கொரு தடவையாவது பள்ளிக்கூட நாடகங்கள் நடந்தேறின. தென்னகத்திலிருந்து நாடகமாட வந்த கலைஞர்களும் வந்திறங்கிய இடம் —சிலவேளை மேடையிட்ட இடமும் — காங்கேசன்துறைப் பகுதியே. எனவே இன்றைய துணைவேந்தர் பிள்ளைப்பருவத்தில் கேட்டது, கண்டது, உணர்ந்தது மக்கள் கலையின் அரிய அம்சங்களையே என்றால் மிகையாகாது.

இவரைப் பெற்றுப் பேணிவளர்த்தெடுத்த பெற்றோரும் கலையுளம் கொண்ட பெருமக்களே. தந்தையார் சட்டத்தரணி திரு. சுப்பிரமணியம், வீமன்காமத்தில் கல்விக்கூடம் அமைத்தமை இவரது கலைநாட்டத்தைச் சுட்டுகின்றது. தாயார் முத்தம்மா பிறந்தது பருத்தித்துறையில். நாட்டுக்கூத்துகள், கரகம், காவடிகள் நன்கு வளர்ந்த கலைப்பூமி இது. இவரது இல்லமே கலைமணக்கும் சிறு அரண்மனை ஆயிற்று எனலாம். வலிவடக்கும் வடமராட்சியும் இணைந்த குடும்பத்தில் இளமைப்பருவம் முகிழ்கிறது. கலைத் துடிப்பு, சூழலின் தாக்கத்தால் இவரை அறியாமலேயே உதிரத்தில் பீறுகிறது.

செழுமையான வளமான கலைச்சூழல்;
கனதியான நல் வித்து
ஆனந்தமாய் வளரும் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# தமிழ்த்துறைத் தேர்வு தழைக்க வைத்தது

ஆங்கிலேயர் ஆட்சியிலே அந்நிய மோகம் தலைவிரித்தாடியது. எமது கலாச்சாரத்தையே மூடிவிடுமோ என்ற பீதியையே உருவாக்கியது. ஆங்கிலம் பேசுவோர் ஒரு வர்க்கமாயினர். 'கோழி மேய்த்தாலும் கோரணமேந்திலை மேய்க்கவேணும்' என்றெல்லாம் நாட்டார் பேசத் தலைப்பட்டனர். 'தம்பி கிளறிக்கல் உத்தியோகம்' என்று கூறுவதில் தனிப்பெருமைகொண்ட பெற்றோர் ஏராளம். தமிழ் ஆசிரியர்கள் மீது இவர்கள் பாய்ச்சியதும் ஒரு எறிபார்வை; எள்ளல் பார்வை. பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் என்ற துறைகளில் கற்கக் கங்கணம் கட்டுவர் மாணவர்கள். வைத்தியத்துறை, பொறியியல்துறை, விவசாயத்துறை, கட்டிடத்துறை கிடைத்துவிட்டால், அவர்களது கால்கள் கீழே இறங்காது. சமூகமும் அவர்களுக்கு ஏனோ அபரிமிதமான முக்கியத்துவம் கொடுத்து உயர்த்தியது. இன்று இந்நிலை குறைவு. அன்று 'தலைக்கனம்' ஏறுமளவுக்கு வளர்ந்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் வித்தியானந்தனவர்கள் தேர்ந்தெடுத்த துறை தமிழ்த்துறை. இதிலேதான் இவரது சிறப்பை, மதிநுட்பத்தை, பெருமையை நான் உணர்கிறேன். இது ஒரு வாழ்வின் புதிய திருப்பம்; நல்ல திருப்பம்; ஈழத் தமிழ்க் கலை தக்க உந்துதலை, உயர்வைப் பெற்றிட ஏற்பட்ட பெரும் திருப்பம் எனலாம். வசதிபடைத்த குடும்பத்திற் பிறந்த இவர், வேறு துறைகளில் புகுந்திருந்தால் வேறு மனிதனாக, கலையூற்று வற்றியவராகவும் மாறியிருக்கலாம். கலாநிதிப்பட்டம் பெறும்வரை தமிழை ஆர்வத் துடிப்புடன் கற்றமை, ஆராய்ச்சிகள் பல நிகழ்த்தியமை எமது கலைப் பின்னணியைத் திட்டவட்டமாக அறிய அரிய சந்தர்ப்பத்தை உதவின. 'தமிழர் சால்பு' போன்ற இவரது ஆக்கங்கள் பல பண்டைத் தமிழர் பண்புகளை உணர வைக்கின்றன. தமிழ்க்கலை செழிக்க இவ்வுணர்வும் அறிவும் பெரிதும் உதவும். ஆக, தமிழ்த்துறையை இவர் தேர்ந்தமை இவரது வாழ்வின் ஒரு சிகரத் திருப்பம்; கலையுணர்வைத் தழைத்திடச் செய்த வலுவான திருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# முத்தமிழ் வித்தகரும் கலையருவியும்

பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்க முன்வந்த திரு. சு. வித்தியானந்தன்மேல் இரு பெரும் கலைமேதைகளின் பார்வை பதிகின்றன. ஒருவர் 'யாழ் நூல்' யாத்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார். மற்றவர் கலாநிதி பேராசிரியர் கலையருவி க. கணபதிப் பிள்ளை அவர்கள். குருஸ்தானத்தில் தக்கோரை, வல்லோரைப் பெற்றிட மாதவம் செய்யவேண்டும் என்பர் முந்தையோர். இந் நோக்கில் வித்தியானந்தனவர்கள் கொடுத்துவைத்தவரே.

இலக்கிய இலக்கணங்களை, வரலாற்றுப் பின்னணிகளைத் துறை போகக் கற்ற பெருமையை விட இவர்களுக்குள்ள தனிப் பெருமை இசையை, நாடகத்தை நயந்த பெருமை; பல்கலைக்கழக மட்டத்தில் புரந்த பெருமை. இசை பற்றிய ஆய்வு நிகழ்த்தி அறிஞர்கள் முன் அரங்கேற்றி, தென்தமிழ் நாட்டினர் போற்றுமளவுக்கு 'யாழ் நூல்' யாத்த விபுலானந்தர், உலக மகா நாடக விற்பன்னர் சேக்ஸ்பியரின் நாடகங்களையும் நயந்தார். தாம் சுவைத்த கலை ஒழுகு கட்டங்களைத் தமிழில் யாத்து 'மதங்கசூளாமணி' என்னும் தலையாய நூலைத் தமிழுலகுக்கு அளித்தார். இத்தகைய மேதையின் எண்ணச்சிதறல்கள், விரிவுரைகள், வழிநடத்தல்கள் வித்தியானந்தனவர்களின் கலையுணர்வில் வாழ்வில் பெரு வீச்சை ஏற்படுத்தியது விந்தையன்று.

விபுலானந்தரைத் தொடர்ந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் பீடத்தில் அமர்ந்தவர் கலையருவி க. கணபதிப்பிள்ளை அவர்கள். மதிநுட்பம் மிக்க இவரது செயற்பாடு கவிதை புனைதல், நாட்டார் வழக்கு, நாடகம் ஆகிய விடயங்களைச் சுற்றிச் சுழன்றது. இவரது 'காதலியாற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை' மண்வளம் வீசிநிற்கும் கவிதைநூல். நாடக ஆக்கம் பல்கலைக் கழக மட்டத்தில் முக்கியத்துவம் பெருத ஒரு காலகட்டத்திலே கலையருவி கணபதிப்பிள்ளை அவர்களின் பேனு கரவேகம் காட்டியது. அதியுயர்ந்த நடையில் நாடகங்கள் எழுதப்பட்ட முறையைத் திசை திருப்பினுர். கிராமிய நடையிலே, பேச்சுத்தமிழிலே, இயற்கைத் தன்மை பளிச்சிடும் பாங்கிலே நாடகங்களை யாத்தார்; 'நானுடகம்', 'இரு நாடகம்', 'தவருன எண்ணம்', 'சங்கிலி' என்ற நாடகங்கள்மூலம் புகழ் பூத்து நின்ருர். பிரதி வடிவிலன்றி முறையாக மேடையிடப்படும் போதே நாடகம் பூரணத்துவம் பெறுகிறது என்பர் நாடகவல்லுநர். இந்நோக்கில் கலையருவியின் ஓட்டம் களைகட்டியதெனலாம். கலையருவியின் ஆக்கங்களுக்கு ஊக்கம் அளித்த பெருமை அவருடன் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்தில் வித்தியானந்தனவர்களுக்குக் கிடைத்தது. வாலிபத்தின் படியேறிய காலம்; துடிப்பாக இயங்கக்கூடிய வயது; துரிதமாகவே செயற்பட்டார். 'தவருன எண்ணம்', 'சுந்தரம் எங்கே', 'துரோகிகள்', 'சங்கிலி' என்ற நாடகங்களை நெறிப்படுத்தினுர். நெறியாள்கை என்பது பொறுப்பான ஒரு கருமமாகும். பரந்து விரிந்த ஆழ்ந்த அறிவு இத்துறையில் இல்லையெனில் நெறியாள்கையே நாடகங்களைக் கெடுத்துவிடும். வித்தியானந்தனவர்களின் நெறியாள்கை வெற்றி தந்தது. நடிகர் தேர்வு நெறியாள்கையில் ஒரு முக்கிய அம்சம். கலாநிதி கா. சிவத்தம்பி மாணவ நிலையில் அன்று தாங்கிய ஒரு பாத்திரம் இன்றும் உள்ளத்தில் நிழலாட்டமிடுகிறது. பாத்திரப்பொருத்தம், நடிப்பு அத்தனையும் அபாரம். எனக்குப் பக்கத்திலிருந்த இரசிகமணி செந்திநாதன் 'சபாஸ்' போடுகிருர். நல்ல கலை இலக்கிய விமர்சகராக பிற்காலத்தில் மிளிர்ந்த கலாநிதி கைலாசபதி, 'தினகரன்' ஆசிரியர் திரு. சிவகுருநாதன் என்போரை மேடைக்குக் கொணர்ந்து, நடிக்க வைத்து, ஊக்கம்கொடுத்து வல்லுநராக்கிய பெருமை வித்தியானந்தனவர்களுக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-1992
LIBRARY

# 4

## கர்ணன் போர்
## நொண்டி நாடகம்

வித்தியானந்தனவர்களின் நாடகப்பணிகளுள் நாடறிந்த நற்பணி, நாட்டுக் கூத்துக்களைப் புடம்செய்து, மேடையேற்றிய பெரும்பணி. ஈழத்துத் தமிழ் நாடக ஒட்டத்தைச் திசைதிருப்பிய காத்திரமான பணி இது என்பேன். மூன்று தசாப்தங்களுக்கு முன், நாட்டுக்கூத்துக்களை, அவற்றின் அச்சாணியான அண்ணாவிமாரை மட்டரகமாக நமது சமூகம் மதிப்பீடு செய்தது. சினிமாத்தாக்கம், மேற்கத்திய நாடகத் தாக்கம் போன்ற காரணங்களால் நவீன வசன நாடகங்களை வரவேற்றது. ஆட்டக் கூத்துக்களைப் 'பட்டிக்காட்டுத்தனமானவை' என எள்ளி நகையாடியது. இத்தகைய ஒரு மங்குநிலையில், நாட்டுக்கூத்தைப் புரப்பவர்போல் வித்தியானந்தனவர்கள் முன்நோக்கி வருகிறார். நாட்டுக்கூத்துக்களுக்குத் தனிமதிப்புக்கொடுத்து, மெருகேற்றி, குறுகிய நேரத்தில் நடிக்கும் வகையில், புரட்சியை ஏற்படுத்தியவர் இவர்; நவீனப்படுத்தியவர் இவர். இவரது திட்டங்கள் பேராதனைத் தமிழ்ச் சங்கம்மூலம் பரிணமித்தன.

பல்கலைக்கழக மட்டத்தில் முதல் முதல் மேடையேறிய நாட்டுக் கூத்து 'கர்ணன் போர்'. இது ஒரு வடமோடிக்கூத்து. வந்தாறுமூலையைச் சேர்ந்த அண்ணாவியார் கா. செல்லையா அவர்களின் துணையுடன் தயாரிப்புப் பொறுப்பை இவர் ஏற்றார். துரிதமாக இயங்கினார்; வெற்றியும் கண்டார்.

இந்நாடகம் பேராதனைப் பல்கலைக்கழகத் திறந்தவெளி அரங்கம், யாழ் நகரசபை மண்டபம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபம், கண்டி அர்ச். அந்தோனியார் கல்லூரி மண்டபம், கொழும்பு றோயல் கல்லூரி மண்டபம் ஆகிய பெரிய கலை அரங்குகளில் மேடையேறியது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர் மத்தியில் பெரும் விழிப்பை ஏற்படுத்தியது. கர்ணனாக திரு. சி. மௌனகுருவும், துரியோதனனாக திரு. அ. நாகேந்திரனும், பொன்னுருவியாகச் செல்வி பொ. ஹம்சவல்லியும், தோழியாக செல்வி மாலதி நடராசாவும் நடித்தனர். வீமன், அர்ச்சுனன், நகுலன், சகா தேவன் பாத்திரங்களைத் திரு. வ. கனகரத்தினம், திரு. தா. தணிகாசலம் பிள்ளை, திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, திரு. செ. விஞசித்தம்பி ஆகியோர் தாங்கினர். கிருஷ்ணர், சல்லியன், குந்தி பாத்திரங் களில் திரு. அ. சண்முகதாஸ், திரு. பொ. பேரின்பராசா, செல்வி ஈஸ்வரி இராசரத்தினம் என்போர் நடித்தனர். தயாரிப்பு உதவியாளராக பணி புரிந்த கலாநிதி கா. சிவத்தம்பி, காலம் சென்ற கலாநிதி க. கைலாச பதி என்போர் கைகொடுத்து உதவினர்; கணிசமான பங்களிப்புச் செய் தனர். சுவைஞர்கள் பலரின் காய்தல் உவத்தலற்ற விமர்சனங்கள் ஏடேறி வந்தன.

> "நாட்டுக்கூத்து முறை இக்காலத்துக்கு ஏற்று வராது என்ற எண்ணத்தை இந் நாடகம் பொய்யாக்கி விட்டது"

எனத் 'தினகரனும்',

> "கர்ணன் போர் ஒரு வெற்றிப் படைப்பு"

என 'வீரகேசரியும்',

> "சிறந்த தயாரிப்பு"

என 'ஈழநாடும்',

> "மட்டக்களப்பு நாட்டுக்கூத்து முறையினை ஆட்டநிலையிலிருந்து நாடக நிலைக்குக் கொண்டுவரும் இம்முயற்சி பாராட்டுதலுக் குரியது"

என 'தேசாபிமானி'யும் புகழாரம் சூட்டின.

> "**Dr. S. Vithiananthan producer of the play should be congratulated and encouraged for his valiant effort in this field**"

என 'Daily News' உம்.

> "**The producer appears to have studied the art of Folk drama and has evolved out of the techniques and conventions for the creation of a national theatre**"

என 'Observer' உம் விமர்சித்தன.

மகாஜனக் கல்லூரியில் இதனைப் பார்த்து மகிழ்ந்த நான், ஈழத் தமிழ் நாடகத் துறையில் ஒரு புதிய சகாப்தம் மலர்கிறது என உவகையுற்றேன்; கலை இலக்கிய நண்பர்களுடன் ஆர்வலர்களுடன் விமர்சித்து விமர்சித்துப் புளகித்தேன். நல்லதைக்கூட நல்லதெனக் கூறாது சிலர் மௌனம் சாதிப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அரங்கேறிய தென்மோடிக் கூத்து 'நொண்டி நாடகம்'. கிராமியக் கதைச் சம்பவம் ஒன்றை அடியொற்றிய இந் நாடகம் கர்ணன் போரைவிட இன்னொருவகையில் நல்விருந்தாய் அமைந்தது. கண்டி கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம், யாழ் நகரசபை மண்டபம், தெல்லி - மகாஜனக்கல்லூரி மண்டபம், பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியக்கல்லூரி மண்டபம், அதனுடன் இணைந்த திறந்த வெளியரங்கு என்பவற்றில் இந்நாடகம் அரங்கேறியது. அத்துடன், கொழும்பு ஹவ்லக் சிரேஷ்ட பாடசாலை மண்டபத்திலும், வவுனியா திறந்தவெளி அரங்கிலும், மன்னார் முற்றவெளித்திடலிலும் இக் கூத்து மேடையேறி வெற்றியும் கண்டது. அரசன், இராணி, மந்திரி, சொக்கன், செட்டி, செட்டி மனைவி, நொண்டி, பொன்னுக்கோன், மதுரைக்கோன், சின்னக்கோன் என்ற பாத்திரங்களை முறையே திரு. செ. அழகரத்தினம், செல்வி செல்வநாயகி செல்லையா, திரு. பொ. அருந்தவநாதன், திரு. செ. எதிர்மன்னசிங்கம், திரு. சி. மௌனகுரு, செல்வி சுகுண கந்தையா, திரு. பொ. பேரின்பராசா, திரு. சா. ஸ்ரீஸ்கந்தராசா, திரு. ப. கனகரத்தினம், திரு. க. கிருஷ்ணமூர்த்தி என்போர் தாங்கித் தரமாக நடித்தனர்.

இக் கூத்தினை நுணுக்கமாக இரசித்த (காலம்சென்ற) கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்களின் விமர்சனத்தில் சில வார்த்தைகள் இதோ:-

**"நொண்டி நாடகத்தில் முக்கியமாக என் மனதைக் கவர்ந்தது மேடைமீது தோன்றிய ஒழுங்கும் ஒழுக்கமுமே. பங்குபற்றிய ஒவ்வொருவரும் நன்றாகப் பாடி ஆடி நடித்தார்கள். ஆயினும் செட்டி, மனைவி, நொண்டி ஆகிய மூவரும் இரசிகர்களின் மனதைக் கூடுதலாகக் கவர்ந்து விட்டார்கள். பாட்டுக்கள் யாவும் பழைய அண்ணாவிமாரின் பாணியிலேயே பாடப்பட்டன. சர்வகலாசாலை மாணவர்கள் இவ்வாறு இந்தப் பாணியில் பாடக் கற்றுக்கொண்டார்கள் என்பது ஆச்சரியம்தான். பேராசிரியர் டாக்டர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கு தேசிய நாடகக் கலையில் அதிக மோகம் உண்டு. கஷ்டத்தையோ, செலவையோ கருதாது, சகல துறைகளிலும் ஆராய்ச்சி செய்து, பண்டைக்கால சாஸ்திர முறைகள் தவறாமலும், தற்காலத்து நாடகப்பிரியர்கள் பார்த்து இரசிக்கக் கூடியதாகவும், ஒரு நவீனமுறையையும் அமைத்துள்ளார். இதனால் இக் கலைக்கு இப்போது ஒரு விசேட அபிமானம் ஏற்பட்டுள்ளது."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## இராவணேஸ்வரன், வாலிவதம்

அடுத்து அரங்குக்கு வந்த சிருட்டிகள் 'இராவணேஸ்வரன்', 'வாலிவதம்' என்பவையாகும். 'கர்ணன் போரும்' 'நொண்டி நாடகமும்' ஏற்கனவே எழுதப்பட்டு பல ஆண்டுகளாக மட்டக்களப்புப் பகுதியில் நடிக்கப்பட்ட நாட்டுக்கூத்துப் பிரதிகளையே அடியொற்றியவை. ஆனால் இராவணேஸ்வரனிலும் வாலிவதத்திலும் வித்தியானந்தனவர்கள் புதுமையைப் புகுத்தியுள்ளார். இந்நாடகப் பிரதிகள் புதிதாக ஆக்கப் பட்டவை. கம்பராமாயணச் செய்யுள்களும் இடையிடை புகுத்தப் பட்டன. சம்பவ ஓட்டங்களிலும் பார்க்க குணசித்திரங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இராவணனாக நடித்த திரு. சி. மௌனகுரு தமது கட்டுரை யொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது:

> ''இராவணனின் வீரம் என்ற குணம்சம்தான் இராவணேஸ்வரன் நாடகத்தில் முக்கியமானது. வீரத்திற்காகவே இலங்கையின் வீழ்ச் சியை ஏற்ற தலைவனாக இதில் அவன் சித்திரிக்கப்படுகிறான். இரா வணேஸ்வரனில் வரும் ஏனைய பாத்திரங்கள் இராவணேஸ்வரனின் குணம்ச வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் வகையிற்றான் படைக்கப்பட் டுள்ளன''.

அன்று சுவைத்தேன், இராவணன் பாத்திரம் இன்றும் என் நெஞ்சில் நிழலாட்டமிடுகின்றது.

இராவணன், அங்கதன், மண்டோதரி, இராமன், கும்பகர்ணன், இந்திரசித்தன், இலட்சுமணன் பாத்திரங்களில் முறையே திரு. சி. மௌனகுரு, திரு. மு. செல்வநாயகம், செல்வி சுகுணா கந்தையா, திரு. இ. தர்மலிங்கம், திரு. சி. க. சரவணபவன், திரு. பொ. பேரின்பராசா, திரு. ந. பரசுராமன் என்போர் தோன்றி அழகுற நடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாலிவத'த்தைச் சுவைத்த பலர் தமது உணர்வுகளைக் கொட்டி விமர்சனம் எழுதியுள்ளனர். 'சு. வி.யின் வாலிவதம்' என்று மகுடமிட்டு 'வீரகேசரி'யில் வெளிவந்த விமர்சனம் நாடகத்தின் தரத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது:

''சொந்தக் குரலில், சொந்த உருவத்தைச் செயற்கை முறையால் அழகுபடுத்தாமல், இயற்கையின் அழகே அழகென்று மேடையில் தோன்றி ஆடிப்பாடி உணர்ச்சிகளை இரசமாக்கி, இரசிகரின் உள்ளத்தில் இறைத்த பெருமை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தினருக்கும் அவர்களை முன்னின்று வழிநடத்திய தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கு முரியது. மட்டுநகர் வாசனையுடன் மலர்ந்துள்ள இந்நாடகம் தமிழ் நாடகச் சுவையின் தெம்பை இம்மியும் நழுவவிடாது, ஆங்கிலக் கலாச்சார இலக்கியங்களுக்கும் சமமாய் ஒன்றரை மணித்தியாலங்களில் இனிது முடிந்தது. அம்புபட்ட வேதனையில் வாலி கொடுமணலின் புழுப்போலத் துடி துடிப்பதும் நாடகப் பண்பு தவறாது பாடுவதும் உரையாடுவதும் வாலி பாத்திரத்தை உச்சத்தில் வைக்கிறது.''

'இராவணேஸ்வரன்' நாடகம்போல, 'வாலிவதத்'திலும் வாலி பாத்திரம் பலமான மையத்தூணாக விளங்குகிறது. நாட்டுக்கூத்தின் மூலம் பாத்திரப் பண்பைக் காட்டும் புது முயற்சியைவிட, கூத்தும் நாடகமும் கலந்த கலைப்படைப்பாய் இது அமைந்தமை இன்னொரு மெச்சப்படவேண்டிய அம்சமாகும். நாட்டுக்கூத்தை நவீனப்படுத்திய அதே வேளை, பரிசோதனை முயற்சிகளையும் துணிந்து புகுத்தியிருக்கிறார் சு. வி. அவர்கள். ஈழத்தமிழர் நாடக வளர்ச்சியில் இம் முயற்சி வளமார்ந்த திருப்பமாகும். நாடகமேடையின் எதிர்காலம் நனி சிறக்க வேண்டும் என்ற இதயத் துடிப்புடன் ஒரு விமர்சகர், ''இதுபோன்ற நாடகங்களின் கருப்பொருள்கள் இக் காலகட்டத்துப் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு எழுதப்படவேண்டும், நடிக்கப்படவேண்டும்'' எனக் குறிப்பிட்டதில் இருந்து பார்வையாளர்களின் சிந்தனைக்குரியவராக சு. வி. அவர்கள் மிளிர்வதைக் காண்கிறோம்.

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் நாடகத்தில் மறுமலர்ச்சி கண்ட சு. வி. அவர்களை வாழ்த்தி மகிழ்கிறார்:

''நாடகத் துறைகள் கூத்து
நாட்டுள பாட்டுத் தாளம்
ஏடகத் துறங்கி ஏங்கி
இறுநிமுச் செறியும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட் டுணைத்துப் பேணிப்
பாயல்விட் டெழுப்பிப் பாழ்நோய்
வீடுசெய் திட்ட டாக்டர்
வித்தியா னந்தன் வாழ்க.''

ஆம்; பண்டிதமணி யவர்களின் வாழ்த்துக்கிடேது!

அரசிஞல் பலதடவை கௌரவிக்கப்பட்ட நற்கலேஞன் 'சொக்கனி'ன் பேஞவில் இருந்து பீறிய வரிகள் அர்த்தபுஷ்டியுடன் மிளிர்கின்றன.

'' நாட்டுக் கூத்தை நம்மவர்கள்
நகைத்த வேளை முன்வந்து
வீட்டுக் கலேயாய் வளர்ந்ததிது
வீரத் தமிழர் முதுசொமிது
வேட்டுக் கொள்வீர் விளங்கிடுவீர்
வியந்து சுவையும் என்றதனைக்
காட்டித் தந்த 'வித்தி'யெனும்
கனிந்த சான்ருேர் வாழியவே.''

மேடைக் கலேவல்லுநர் கவிஞர் சுந்தவனம், சு. வி. அவர்களை

'நாட்டுக் கூத்தின் நன்னயக் காவலர்'

எனப் புகழ்ந்து பூரிக்கிருர்;

'மாஞம் கலேகளே வாழும் வகை செய்தவர்'

எனச் செப்பிப் பெருமிதங் கொள்கிருர்.

நாடகத்துறையைத் துலைறபோகக் கற்றவரும் இதில் ஆய்வுகள் பல நிகழ்த்தியவருமாகிய பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் சு. வி. அவர்களே நன்கு புரிந்துகொண்டவர். ஆங்கிலத்தில் அவர் தீட்டிய வரிகள் ஈண்டு நோக்கத்தக்கவை:

*"Vithiananthan's greatest contribution is his work in the field of Tamil Drama. A hypothetic withdrawal of all what he had written and produced in this field and those that have arisen directly from the inspiration provided by him and his works would reveal how much poor would Tamil Drama in Sri Lanka be without him."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## பிரச்சினைகள்; தீர்வுகள்

ஈழத் தமிழ் நாடக உலகில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய மேற் குறிப்பிட்ட கலையாக்கங்களை மேடையிட முன்வந்த கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப் பார்; சிரமமும் பட்டிருப்பார். அவற்றைத் தீர்த்துத் தமது கருமத்தை நிறைவேற்றியதில் இவரது ஆளுமையை நாம் காண முடிகிறது.

'பல்கலைகழகத்தில் பட்டிக்காட்டு நாடகமா? அநாகரிகமான ஆட்டங் கள் விரவிய கூத்தா?' என்றெல்லாம் சில முணுமுணுப்புகள் நிகழ்ந் திருக்கலாம். இன்னும் பல எள்ளல்கள் எழுந்திருக்கலாம். இருந்த போதும், இந் நாட்டுக் கூத்துக்களைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேடை யிட்டு, வெற்றியீட்டலாம் என்ற அவரது திடசங்கற்பம் போற்றுதலுக் குரியது. இத் துணிவின்றி, உள்ள உரமுமின்றி தடம்புரண்டு இருப் பாரேயானல், வெற்றிநடையிட்ட இக் கலாசிருஷ்டிகளைத் தமிழ் நாடக உலகு இழந்திருக்கலாம்.

நாட்டுக் கூத்துக்கள் கிராமங்களில் ஆடப்பட்டவேளை பெண் பாத் திரங்களை ஆண்களே தாங்கி நடித்தனர். பல்கலைக்கழகத்தில் அது எடுப் பாக அமையாது என உணர்ந்த சு. வி. அவர்கள், மகளிரைப் பெண் பாத்திரம் தாங்க வைத்தார். பெண்கள் நாடகத்திற் பங்குகொள்வதைக் கற்றறிந்தோரே குற்றம் சுமத்திய காலமது. ஒருவகைப் பிற்போக்கு நிலை அது. இதனுல், மாணவிகள் துணிந்து நடிக்க வராமல் இருந்திருக்க லாம். 'படிக்கவா, நடிக்கவா' எனப் பெற்ருேர் கடிந்திருக்கலாம். இந் நிலையில் மாணவர்களை வழிப்படுத்திப் பெற்ருேர்க்கு விடய விளக்கம் கொடுத்து ஆற்றுப்படுத்தி இருபாலாரையும் சேர்த்து நடிக்கவைத்த இவரது துணிவை மெச்சியே ஆகவேண்டும். இரு ஒரு நற்சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நாடகத்தின் அடிப்படைக் காரணம், ஒழுங்கான திட்டமிட்ட ஒத்திகை என்பர் நாடக வல்லுநர். பாடலும் ஆடலும் விரவிய நாடகங்களை மாணவர்களுக்குப் பழக்கி எடுப்பது சாதாரண விடயமல்ல. நீண்ட கால ஒத்திகைகளின் அறுவடையாகவே இவற்றை உருவாக்கலாம். மட்டக்களப்பு, மன்னார்ப் பிராந்தியங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலரைத் தவிர்ந்த ஏனையோர்க்குத் தாளக் கட்டுகளுக்கு ஆடச் சிரமம் இருந்திருக்கலாம். இதனால் வெட்கம், பின்னடித்தல் என்பவை ஏற்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் சாடும் வகையில் ஊக்கி, ஒத்திகைகளை ஒழுங்கு நிலவ நடாத்துவித்த பெருமை இவருக்குண்டு. அனைவரையுங் கொண்டுகூட்டி அண்ணாவியாரையும் சமாளித்து நடிகர்களுக்கும் அண்ணாவியாருக்குமிடையே பாலமாய் அமைந்து, ஒத்திகைகளில் வெற்றிகண்டுள்ளார். தமது காலத்தை, பொன்னான நேரத்தை இத்தகைய கலையாக்கத்திற்குச் செலவிட ஒரு பெரு நோக்குள்ள ஒருவரால்தான் முடியும்.

நாடகத் தயாரிப்பு களைகட்டிய நிலையில், உடைகள் தயாரித்தல் தயாரிப்பாளனின் உள்ளத்தை உறுத்தும் பாரிய சிந்தனையாகும். காலப் பொருத்தம், பாத்திரப் பொருத்தம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இதிலீடுபடல் வேண்டும். கணிசமான ஆய்வு இக் கட்டத்தில் தேவைப்படுகிறது.

உடைகளைப் பொருத்தமாக, அழகாக, கலையொழுக, தயாரிப்பிப்பதும் பிரச்சினைக்குரிய விடயமே. இப்பொறுப்பைக் காலஞ்சென்ற இவரது துணைவியார் திருமதி கமலா வித்தியானந்தன் அவர்கள் ஏற்று, திறம்படச் செய்துள்ளார். நாடக விமர்சனங்களே இதைப் பறைசாற்றுகின்றன. திரு. சு. வித்தியானந்தனின் குடும்பமே இவ்விடயத்தில் ஈடுபட்ட தன்மை இவரது கலையார்வத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட நாடகங்களைப் பல்வேறு பிராந்தியங்களில் மேடையிடுவது தொடர் சங்கிலிபோல் பல பிரச்சினைகள் உள்ளடக்கிய பெரும் பிரச்சினையாகும்.

பல்கலைக்கழக மேடையேற்றத்தில், தமிழ்ச் சங்கம் நிர்வாகப் பொறுப்பின் பெரும்பங்கை ஏற்றிருந்தாலுங்கூட, பல இன மக்கள், உயர்தர இரசிகர்கள்முன் நற்பெயரை நிலைநாட்டும்வகையில் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் தயாரிப்பாளருக்கு ஏற்பட்டிருக்கும். ஒழுங்கு, ஒப்பனை, மேடை நிர்வாகம், ஒளி, இசை இன்னோரன்ன பல விடயங்களில் அன்றையதினம் மிகக்கூடிய கவனத்தைப் பாய்ச்சியிருப்பார். யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களில் மேடையிட இவரது செல்வாக்கு, ஆளுமை, பெரிதும் உதவியிருக்குமென்பதில் ஐயமில்லை. தமது பழைய மாணவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள், அறிமுகமான அதிபர்கள், மற்றும் கலைஞர்கள் துணையைப் பெறக்கூடிய ஒருவராக அவர் திகழ்ந்ததினால்தான் வெளியிடங்களில் இலகுவில் மேடையேற்ற முடிந்தது. நாடக மேடையேற்றம் நிதிப் பிரச்சினையையும் உள்ளடக்கிய ஒன்றாகும். சாதாரண மனிதனால் இதனைச் சமாளிக்க முடியாது. பலரையும் அணுகி, நிதிதிரட்டி, தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வேகமாகத் தொழிற்பட்டவர் இவர் இராப்பகல் என்று பாராது பல்வேறு பிராந்தியங்களுக்கும் இந் நோக்குக்காகப் பம்பரம்போல் சுழன்று தாமே படியிறங்கி மக்கள் உதவியைக்கூடக் கேட்ட காலமும் உண்டு. 'விரிவுரையாளர் பதவியிலுள்ள நான் இப்படியெல்லாம் திரியவேண்டுமா?' என்ற கர்வமான எண்ணம் தொக்கு நின்றிருக்குமேயானால் இத்தகைய கலைச்சாதனைகளை எமது சமுதாயம் பெற்றிருக்க முடியாது. நிதிப்பிரச்சினை பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கலாம். இவரது தளராத ஊக்கமும், மற்றையோரை உந்திநின்ற தன்மையும், நற்பண்புகளும், தன்மைகளும் இவ் விடயத்தைச் சமாளிக்கவைத்தன.

நடிகர்களை நாடகத்திற்கெனத் தொலைவான இடங்களுக்குக் கூட்டிச் செல்லும் விடயம் ஒரு தொல்லைதரும் காரியம். சகோதரன்போல், நண்பனைப்போல், தந்தையைப்போல் — பிரயாணவேளையில் — பல உருவெடுத்தே தயாரிப்பாளன் சமாளிக்க நேருகிறது என்பதை நாடக அனுபவஸ்தர்கள் நன்கறிவர். பெண்களை அழைத்துச்செல்வது நாடகம் முடிவுற்றுத் திரும்ப மீளும்வரை பொறுப்பாகவும், பத்திரமாகவும் நடக்கச்செய்வது என்பவையும் தயாரிப்பாளனின் தலைமேலான காரியமேயாகும். இவற்றைச் சமாளிப்பதற்கு சு. வி. அவர்கள் தமது பாரியாரின் துணையையும் பயன்படுத்தியுள்ளார். சாதுரியமும் பண்பும் தாய்மையுணர்வும் கொண்ட இவரது துணைவியார் இப் பிரச்சினைகளை இலகுவாய்த் தீர்த்திருப்பார்.

மேற்படி நாடகங்கள் மேடையேறியவேளையில், நல்நோக்கு விமர்சனங்கள் வந்ததுபோல, கண்டனக்குரல்களுக்கும் குறைவிருக்கவில்லை. தரக்குறைவான கண்டனங்கள் சிலவற்றில் பொறாமையின் நிழல்கூடப் படிந்திருந்தது. இவைகளுக்குத் தாக்குப்பிடித்து, இரட்டிப்புவேகத்துடன் தொழிற்பட்டு, தன் கருமமே கண்ணாக மிளிர்ந்தார். கலையுலகில் பலர் பல நோக்கங்களால் உந்தப்பட்டு, மட்டந்தட்டுகின்ற போக்குடன் தொழிற்படுகின்றனர். அத்தகையோரைத் துச்சமென மதித்துத் தூக்கி எறியும் மனோநிலை இருந்தால்தான் நாம் சாதனைவீரராகலாம். இத் தன்மை முழுக்க முழுக்க சு. வி. அவர்களைப் பொறுத்தளவிலே தொழிற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# பெறுபேறுகள்

ஈழத்தமிழ் நாடக உலகிற் பவனி வந்த இந்நான்கு நாடகங்களும் காத்திரமான நற்பயன்களை ஈந்தன. பல்கலைக்கழக மாணவர்களே சலங்கை கட்டி நாட்டுக் கூத்துக்களை ஆடத் தொடங்கி விட்டனர். விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் போற்றத் தலைப்பட்டு விட்டார்கள். இரசிகர்கள் அணிதிரண்டு பெருந்தொகையினராக நயந்து மகிழ்கின்றனர். நாளேடுகளும் சிற்றேடுகளும் படங்களையும் விமர்சனங்களையும் தாராளமாகப் பிரசுரித்து முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவை போன்ற இன்னோரன்ன உணர்வோட்டங்கள், தாழ்வுணர்ச்சியுடன் சலிப்புற்றிருந்த, முடங்கிக்கிடந்த அண்ணாவிமாரிடம் மாபெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. தமது ஆற்றல், வல்லமை என்பன அறிவுலகம் போற்றுமளவுக்கு உயர்வானது என்ற சிந்தனைக் கிளறல், புதிய உத்வேகத்தையும் மேம்பாட்டையும் இவர்களுக்கு ஏற்படுத்தியது. இதன் விளைவு ஒருவித புதிய எழுச்சியை அண்ணாவிமாரிடம் உருவாக்கியதே.

விடிய விடிய ஆடப்பட்ட நாடகங்களிற் புதுமையைப் புகுத்தி, குறுகிய நேரத்தில் மேடையிட்ட தன்மையைக் கண்ட அண்ணாவிமார் — அளவான, பொருத்தமான, ஆனால் அடிநாதம் மாறுபடாத — மாற்றங்களை வரவேற்றே ஆக வேண்டுமென உணரத் தலைப்பட்டனர். மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களில் வடமோடி தென்மோடி ஆட்ட வகைகளை ஆடவைத்து அவற்றின் திட்பநுட்பங்களை நுணுக்கமாக, வகுப்பு நடாத்துவது போல, கலாநிதி சு. வி. அவர்கள் விளக்கியதன் விளைவாகப் புதிய சிந்தனைகளை, சீரிய தயாரிப்பு அம்சங்களை அண்ணாவிமார் பெற முடிந்தது. அவர்களது ஆக்கங்கள் மெருகேறி நாடக உலகை வளமாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப் படிப்புக்காகப் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் பலர், நாட்டுக் கூத்து நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்டு பழகி, கலாநிதி சு. வி. அவர்களின் அரவணைப்பில் அகில இலங்கையும் அறியும் படியான பிரபல்யம் பெற்றனர்; பட்டம் பெற்ற பின்பும் கூட இத் துறையில் மன்னர்களாகப் பீடு நடையிடுகின்றனர். இன்றைய பேரா சிரியர் அ. சண்முகதாஸ், கலைஞன் மௌனகுரு இவரது ஒளிவீச்சில் பிரசித்தமானவர்களே. திரு. மௌனகுருவின் 'சங்காரம்', அரங்கக்கல்லூரி யின் படைப்பாக இன்றும் பலமட்ட நிலை அரங்குகளிலும் பாராட் டைப் பெறுகிறது. தொடவேண்டியவர் தொட்டுவிட்டார்; திரு. மௌன குருவின் தனியாற்றல் கலையுலகில் நற்பயன் தருகிறது. தொடர்ந்தும் இக்கலையூற்றுப் பாயும்.

நம்பிக்கையுடன் பணம் கொடுத்து, தமிழ் நாடகங்களைப் பார்த்து ஏமாற்றமின்றி மீளலாம் என்ற உணர்வைப் பார்வையாளர்களின் உள்ளங்களிற் பாய்ச்சிய காரணத்தால், தரமான உயர்தர இரசிக ருலகின் உதயத்திற்கும் இந் நான்கு நாடகங்கள் உதவின.

இந் நாடகங்களை நயந்த கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள், தமது நிறுவனங்களின் பரிசளிப்பு விழா போன்ற வைபவங்களில், நாட்டுக் கூத்துக்களைத் துணிந்து ஆட வைத்தனர். இந்த உந்துதலை ஊட்டியவர் சு. வி. அவர்களே. மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரி இவ் விடயத்தில் முன்னணிக்கு வந்தது. ஒருபடி மேலாக, ஆண் வேடங் களைக்கூட மகளிர் தாங்கி கனகச்சிதமாக ஆடினர். மயக்க நிலையில் இருந்த மாணவ இரசிகர் கூட்டம், இத்தகைய ஆக்கங்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் 'எமது பொக்கிஷம்' எனப் போற்றவும் தலைப்பட்டது. இத்துணைக்கும் முன்னோடியாய் நின்றவர், நிற்பவர் கலாநிதி சு. வி. அவர்கள் என்றால் மிகையாகாது.

UNIVERSITY OF JAFFNA
1-8-1992
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகப் பிரிவுத் தலைவராக

மரபு வழிவந்த கலைப் பொக்கிஷங்களைப் பேணுதல், தமிழ் நாடக உலகை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லுதல் என்ற உயரிய இலட்சியங்களுடன் 'இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகப் பிரிவு', 1952ல் உதயமானது. ஆரம்பகாலத்தில், பேராசிரியர் கலாநிதி க. கணபதிப் பிள்ளை தலைவராகப் பணிபுரிந்தார். 1957முதல் தலைமைப் பீடத்தை ஏற்ற கலாநிதி சு. வி. அவர்கள், ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேல், மிகத் துரித கதியில் இயக்கினர். இவரது காலம் 'கலைக்கழகத் தமிழ் நாடகப் பிரிவின்' பொற்காலம் என மதிப்பீடு செய்யுமளவுக்கு நற்சாதனைகள் பலவற்றை ஆற்றியுள்ளது.

### பாடசாலை நாடகம்

தரமான நாடகங்கள் நம்மத்தியில் உருவாக வேண்டுமானல், பாடசாலைகளில் கனதியான நாடகங்கள் தயாரிக்கப்பட வேண்டும். நாடகப் பண்புகள், அடிப்படை அம்சங்கள் இளம் உள்ளங்களில் விதைக்கப்பட்டு உரமேற்றி வளர்க்கப்பட்டால்தான், ஸ்திரமான வளர்ச்சியை இத்துறையில் நாம் எய்த முடியும். நாடகமூலம் மாணவர்கள் நற் பண்புகளைப் பெற்று, ஆளுமை மிக்கோராய்த் திகழ்ந்து, நாட்டுக்குப் பயன்தரும் நற்பிரசைகளாகக்கூட மிளிர முடியுமென அறிஞர் பெருமக்கள் பகருகின்றனர். ஆயின், மூன்று தசாப்தங்களுக்கு முன் இத்துறை, கல்லூரிகளில் தேக்கமுற்றே இருந்தது. உத்தியோகப்படிப்பு என்ற கோட்பாடு தலைதூக்கி நின்றது. ஆங்கிலம் விஞ்ஞானம் கணிதம் கற்பதிலும், விளையாட்டுத் துறையை விருத்தி செய்வதிலும் மாணவர்கள் முடுக்கி விடப்பட்டார்கள். நாடகம் மாற்றாந்தாய் மனைப்பான்மையில் மங்கியது. இத்துறையைக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வளர்க்க முன்வந்த நாடகம்வல்ல ஆசிரியர்கள் பட்ட சிரமங்கள் ஏராளம். அதிபர்கள் சிலர் பராமுகமாய் இருப்பதுமுண்டு. ஆசிரியர்கள் எள்ளி நகையாடி 'பைத்தியக்காரத் தனமென'க் கண்டிப்பதுமுண்டு; பரிகாசம் செய்வது முண்டு. ஊக்குவிப்பின் தேவை பெரிதும் வேண்டப்பட்ட ஒரு நிலையில், அகில இலங்கை ரீதியில் பாடசாலை நாடகப் போட்டி அமைக்க 'கலைக் கழகத் தமிழ் நாடகப் பிரிவு' முன்வந்தது. தலைவர் கலாநிதி சு. வி. அவர்கள் ஆர்வத் துடிப்புடனும் விஸ்வாசத்துடனும் தொழிற்பட்டார். அவர் வழிகாட்டலில் பிரதேச ரீதியில் போட்டிகள் அமைக்கப் பெற்று, அவை இறுதிப் போட்டிகளாக, அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்டன. அவற்றுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இவை பாடசாலை நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதமாய் அமைந்தன. இதனால் பல கல்லூரிகள் போட்டிகளிற் பங்கு கொள்ள முன் வந்தன.

மாணிப்பாய் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, யாழ்-வேம்படி மகளிர் கல்லூரி, மட்டுவில் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, யாழ்-கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்-இந்துக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரி, அரசடி அரசினர் சிரேஷ்ட தமிழ்க் கலவன் பாடசாலை, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, அட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி உட்பட்ப் பல கல்விக்கூடங்கள் இறுதிப்போட்டிகளில், காலத்துக்குக் காலம் கலந்துகொண்டன. பிரதேசமட்டத்தில் நிகழ்ந்த போட்டியில் ஒரு தடவை மட்டக்களப்பில் மட்டும் பதினறு பாடசாலைகள் பங்குகொண்டன. நாட்டுக்கூத்துக்களைக்கூடத் தயாரித்தளித்தன. வருடாவருடம் பாடசாலை நாடகங்களின் தரமும் போட்டி காரணமாய் உயரத் தொடங்கிற்று. மக்கள் மன்றில் பாடசாலை நாடகங்கள் தக்கவோர் இடத்தைப் பெற்றன. நாடகத்தைத் தொழிலாய்க் கொண்ட சில குழுக்களின் தரத்தைவிட விஞ்சிய நிலையை இவை எய்தின. பல கல்லூரிகளில் மாணவ மாணவிகள் கலந்து நடிக்கவும் தலைப்பட்டனர். இது ஒரு குறிப்பிடத்தக்க திருப்ப நிலை. அகில இலங்கை ரீதியில் வருடா வருடம் பத்தாயிரத்துக்கு மேலான இரசிகர்களையும் இருநூற்றுக்கு மேற்பட்ட பண்பான நடிகர்களையும் உருவாக்கும் பெரும்பணி இப் போட்டிகளின் விளைவாக ஏற்பட்டது. 'கலைக்கழகத் தமிழ்ப் பிரிவின்' பணியாக இது அமைந்த போதிலும் பல நிறுவனங்கள் பங்குபற்ற, தனிப்பட்ட கடிதமூலமும் சந்திப்புமூலமும் ஊக்கிப் பங்களிப்புச் செய்தவர், கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி சு. வித்தியானந்தன் அவர்கள். இவரது விடாமுயற்சியும் தளரா ஊக்கமும் பாடசாலை நாடகத்துறையில் இவருக்குப் பெரும்புகழ் ஈட்டின.

**நாடக எழுத்துப் போட்டி**

நாடகம் எழுதுதல் ஒரு தனிக் கலை. சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம் என்ற துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி முன்னேற்றம் நாடகத்தைப் பொறுத்தவரை ஏற்படவில்லை. அதுவும் 1955க்கு முன் மிகத் தேக்கமுற்ற நிலையிலேயே இருந்தது. காத்திரமான உரிப்பொருள், உருவம், பாத்திரவார்ப்பு, செட்டான இறுக்கமான உரையாடல் என்பன இன்றி, கட்டுக்கோப்பின்றி நாடகங்கள் எழுதப்பட்டன. சினிமாக் கதை வசன நூல்களைப் படித்த அருட்டுணர்வில் அதுபோலவே மேடை நாடகங்களை எழுதியவருமுளர். இருபது முப்பது காட்சிகளில் நாடகங்களை எழுதி மேடையிடும்போது பிரச்சினையுற்றவர்கள் பலர். கதை இல்லா நாடகங்கள், பிரதிகள் அற்ற நாடகங்கள் எனப் பல நிலையில் எமது நாடக உலகம் தடம்புரண்டோடியது. அவ்வேளை 'கலைக் கழகத் தமிழ் நாடகப் பிரிவு' பால் வார்த்தமாதிரி, நாடக எழுத்துப் போட்டியை அமைத்தது; பணப் பரிசுகளைக் கொடுக்க முன்வந்தது. எழுத்து நிலையில் ஒரு அளவாவது செப்பனிடப்பட்ட நாடகப் பண்புகள் மிக்க பிரதிகள் எழுதப்பட்டன. 'இரு மணித்தியாலங்கள் நடிக்கக்கூடிய நாடகம் ஐந்து ஆறு காட்சிகளைக் கொண்டதாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு காட்சியும் குறைந்தது பத்து நிமிடங்களுக்காவது நடைபெறுவதாய் அமையவேண்டும்' என்ற விதிகள் நாடக எழுத்தில் அக் காலகட்டத்திற் பெருந் திருப்பத்தை ஏற்படுத்தின. ஆற்றலும் அநுபவமும் மிக்க பல படைப்பு இலக்கியகாரர் தம் கைவண்ணத்தை இத்துறையிற் காட்டிக் கனதியான பிரதிகளை ஆக்கினர்; பரிசுகள் பெற்றனர்.

ஓரங்க நாடகத்துறை வளமார்ந்த நிலையை எய்தவேண்டுமென்ற நோக்கில் 'கலைக்கழகத் தமிழ் நாடகப் பிரிவு ஓரங்க நாடக எழுத்திலும் போட்டியமைத்தது. இது நாடக, எழுத்துத் துறையை மேன்மேலும் வளர்ந்தோங்க வழிவகுத்தது. 'ஓரங்க நாடகம் எப்படி எழுதப்பட வேண்டும்? அதன் அடிப்படை அம்சங்கள் பண்புகள் எவை? சிறு நாடகத்துக்கும் ஓரங்க நாடகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?' என்பன போன்ற விடயங்கள் பற்றிய விளக்கமின்றி எழுத்தாளர்கள் அங்கலாய்த்த காலமுண்டு. ஓரங்க நாடகம் எழுதுவதாய் எண்ணி முழுநீள நாடகத்தைத் துண்டுபடுத்தியும், சுருக்கியும் எழுதியவர்களும் உளர். ஆக, இப் போட்டி காரணமாக ஓரங்க நாடகம் எழுதுதல் பற்றிப் பல நாடகாசிரியர்கள் ஆராய்ந்து அதற்குரிய பண்புகள் பிறழாது பல சிறந்த ஆக்கங்களைப் படைத்தனர்; பரிசும் பெற்றனர். ஓரங்க நாடகம் எழுதுதல் பற்றிய சர்ச்சைகள், கருத்துப் பரிவர்த்தனைகள் இதன்காரணமாய் எழுத்துலகிற் பரவலாக அடிபட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் முழுநீள, ஓரங்க நாடகங்களுக்குப் பரிசுபெற்றனர். திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), காலம்சென்ற யாழ்ப்பாணம்—தேவன், திருவாளர்கள் முல்லைமணி, முத்து சிவஞானம், சு. வே., எஸ். பொன்னுத்துரை, நா. இராசரத்தினம், சோ. நடராசா, ஏ. ரி. பொன்னுத்துரை, செம்பியன்செல்வன் என்போர் பரிசுபெற்றவர்களிற் சிலர். இத்தகைய ஊக்குவிப்பு எழுத்தாளர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. 'கலைக் கழகத் தமிழ்ப் பிரிவு'த் தலைவர் என்ற முறையில் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் தக்க பணியை, தக்க வேளையிற் புரிந்தார் என அறுதியிட்டுக் கூறலாம்,

**நாடகமன்றங்கள்**

1955ஆம் ஆண்டளவில், நாடகமன்றங்கள் பல புற்றீசல்கள் போலத் தோன்றிய போதிலும், நிர்வாகம் — ஒழுங்கு — கட்டுப்பாடு மேடையிட்ட ஆக்கங்களின் தரம் என்பவற்றில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. வசதிகள், வாய்ப்புகள், ஆதரவுகள், அரவணைப்புகள் இன்றியும் பல இன்னல்களுக்கு உட்பட்டன. தரமான, அதே வேளை மேடைக்கு எடுப்பாய் அமையவல்ல பிரதிகள் கிடைப்பதிலும் சிரமங்கள் இருந்தன. நெறியாளுகை நுட்பங்களை துறைபோகக் கற்ற அநுபவ இயக்குநனைத் தேடிப்பிடிப்பது, ஒழுங்காக ஒத்திகைகளை நடாத்துவது, அதற்கென வசதியான மண்டபம் ஒழுங்கு செய்வது என்பன எல்லாம் சிக்கல்கள் நிறைந்த பிரச்சினைகளாகின. எல்லாவற்றிற்கும் மேலாக நிதிப்பிரச்சினை பூதாகாரமாகி முட்டுக்கட்டையிட்டு மன்றங்களைத் திண்டாடவைத்தது. தாமாகவே பணங்கொடுத்து, நாடகம் பார்க்கும் மனோநிலை இரசிகர்களுக்கும் தோன்றவில்லை. உறவினர் நடிக்கின்றனர் என்பதற்காக அல்லது முகத்துக்கு ஒஞ்சி பிரவேசச் சீட்டுப் பெறும் வழக்கமும் வலுவுற்றது. இத்தகைய சூழலில் கலையார்வம் கொப்பளிக்க மன்றங்களைப் புரந்திடப் பலர் முற்பட்டனர். சிரமங்களும் உற்றனர்.

இந்நிலையில், 'கலைக்கழகத் தமிழ் நாடகப் பிரிவு', மன்றங்களுக்கு, அவற்றின் சேவைக்கேற்ப பண நன்கொடைகள் உதவ முன்வந்தது. இவ்விடயத்தில் நேர்மையாக, கலைவளர்ச்சியையே தனி இலக்காகக் கொண்டு கருமமாற்றிஞர் பேராசிரியர் சு. வி. அவர்கள். மன்ற நாடகப் போட்டியமைத்துத் தகுதிவாய்ந்த மன்றங்களுக்குப் பரிசளித்து ஊக்கமூட்டிஞர்; மலர்கள் வெளியிட்டும் பத்திரிகைகளில் விமர்சனங்கள் வருவதை வரவேற்றும் நாட்டுப்புறங்களில் மங்கியிருந்த நாடக விற்பன்னர்களை மேன்மேலும் தூண்டித் துரிதமாக இயங்கவைத்தார். பல மன்றங்கள் போட்டிகளிற் பங்கு கொண்டு பரிசுகள் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூர் வளர்பிறை நாடகமன்றம், யாழ்–மறுமலர்ச்சி மன்றம், முருங்கன் முத்தமிழ்க்கலை மன்றம், அக்கரைப்பற்று விபுலாநந்த நாடக மன்றம், ஆரையம்பதி நாடகமன்றம், யாழ்-ஓறியன்ஸ் நுண்கலை மன்றம், ராஜ் நகைச்சுவை நாடகமன்றம், கொழும்பு அமெச்சூர் குழு, மட்டக்களப்பு கச்சேரி நாடகமன்றம், வசந்தகான சபை, மட்டக்களப்பு காரைதீவு நாடகக்குழு, குருமண்வெளித் திருவருள் நாடக மன்றம், திமிலை நளின கலாமன்றம், வாஞெலி நாடகக் குழு உட்பட பல மன்றங்கள் பங்கு கொண்டு விழிப்புப் பெற்று நாடக உலகைச் செழித்திடச் செய்தன. பேராசிரியர் சு. வி யின் அன்புக்கரம், அணைக்கும் கரம் என்றுமே மன்றங்களின் வளர்ச்சிக்கு உதவிற்று.

## கருத்தரங்குகள்

கலை இலக்கியத்துறைகளை வளர்த்தெடுக்கக் கருத்தரங்குகள் துணை நிற்கின்றன. நீண்ட சொற்பொழிவுகளைவிட, ஒருதுறை சார்ந்த பல விற்பன்னர்கள் கூடிக் கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்து, அலசி ஆராய்ந்து, தீர்க்கமான நல்லமுடிவுகளை எடுக்கும் முறை வளர்ச்சித் தடத்தில் அத்துறையைத் துரிதப்படுத்த உதவும். நாடகம் பற்றிய பல கருத்தரங்குகள் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னர், வவுனியா, அற்றன் ஆகிய இடங்களில் நடைபெற்ற வேளை, பேராசிரியர் சு. வி. அவர்கள் சிறப்பாக, சாதுரியமாக நடாத்தி முடித்தார். இத்தகைய காத்திரமான கருத்தரங்குகள், இதற்குமுன் தமிழில் நம்மத்தியில் நடந்ததில்லை. தயாரிப்பாளர் பிரச்சினைகள், மரபுவழி நாடகங்கள் நகர்ப்புற நாடகங்கள், பார்வையாளர் பிரச்சினைகள், பயில்முறை நாடகங்களின் பிரச்சினைகள், நாடகம் எழுதுதல், பாடசாலை நாடகம், ஓரங்கநாடகம், வரலாற்றுநாடகம், நாடகத்தில் உரிப்பொருள், இலகு நாடகம், நாடகத்தில் சிறுபாத்திரம், கவிதை நாடகம் இன்னேரன்ன பல முக்கிய விடயங்கள் பற்றிய கருத்தரங்குகளிற் பல கற்றறிந்த வல்லுநர்கள் பங்கு கொண்டமையும், கேட்போர் கூடத்தில் அமர்ந்தவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டு நற்பலன் பெற்றமையும் நாடக வளர்ச்சிக்கு, எழுச்சிக்கு வழிவகுத்தன. வளரும் எழுத்தாளர்கள், நடிகர்கள், இயக்குநர்கள் ஆழ்ந்த புதிய கருத்துக்களை உட்கொண்டு தமது படைப்புக்களை வளமார்ந்த நிலைக்கு இட்டு பெருமிதமுற்றனர்.

## கௌரவ விழாக்கள்

கலைத்துறையிற் கணிசமான பணிபுரிபவனைப் பாராட்டிக் கௌரவித்தல் பண்டுதொட்டு நம்மிடையே வழங்கிவரும் மரபு. ‘மாலைகளாம், வாழ்த்துப் பத்திரங்களாம், பட்டங்களாம், பொன்னுடைகளாம்’ என்று எள்ளற் பேச்சுப பேசும் கையாலாகாதவர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள். நிலப்பரப்பாற் குறுகிய இலங்கைத்தீவில், அதுவும் சிறிய தமிழ்ப் பிரதேசத்தில், நாடகம் நடாத்த முன்னிற்பவன் தனது பொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன் நேரத்தை, சக்தியை மேலாகச் செல்வத்தைக்கூட கரைக்கின்றான். பரந்து விரிந்த நாடுகளின் கலைஞர்கள் தமது படைப்புக்களை, ஏராள மான மக்கள்முன் தினம் தினம் காட்டும் வாய்ப்பிருப்பதால், குபேர நிலை எய்துகிறார்கள். எமது நாட்டில் காணிவிற்று நகைவிற்றுக்கூட நாடகமாட நேருகிறது. பல தியாகங்களின் அறுவடையாகவே, அதுவும் எள்ளிநகைப்போரின் மத்தியிலேயே நாடகம் வளர்க்கப்படுகிறது. இவ் வளர்ச்சிக்கு உறுதுணையாய் அல்லும் பகலும் பாடுபடும் விஸ்வாசமான கலைஞர்களைக் கௌரவித்து விழா எடுப்பது அரிய நற்பணியெனலாம். இத்தகைய பணிகள் முறைப்படி நிகழ, முன்னிற்பவர் பேராசிரியர் கலாநிதி சு. வி. அவர்கள்.

துணைவேந்தர் அவர்கள், அரங்கொன்றிற் பாராட்டுக்கள்பற்றி பின்வருமாறு வற்புறுத்திப் பேசுகிறார்:

''பாராட்டு விழாக்கள் பல வகைகளில் நன்மை பயக்கின்றன. அவற்றின்மூலம் பிறரைப் போற்றும் பண்பை நாம் வளர்க்கின் றோம். இனியவை கூறும் சால்பைப் பெறுகிறோம். பிளவு குன்றி ஒற்றுமை பெருகுகின்றது. பண்பட்ட மனிதர்களாக வாழ வழிவகுக் கின்றது. கலைஞருக்கு உள்ளம் உவகையாற் பொங்குகிறது. இதனால் கலைஞர்கள் ஊக்கம் பெறுகின்றனர்.''

ஈழத்துத் தமிழ் நாடகத் தந்தை என்று பலராலும் பாராட்டப் படும் கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்களுக்கு யாழ். திறந்த வெளியில் நிகழ்ந்த பாராட்டு விழாவில், தலைமைதாங்கி, நடிகர் டி. கே. பகவதிமுன் கலையரசின் நாடகப் பணியை நயம்பட உரைத்தார். இசை நாடக மேதைகளாம் கிருஷ்ணாழ்வார், நடிகமணி வி. வி. வைர முத்து என்போரை கௌரவித்து புளகித்தார். புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்களின் பாராட்டு விழாவிலும், தக்க பங்களிப்புச் செய்தார். 'கலைக் கழகத் தமிழ் நாடகப் பிரிவின்' ஆதரவுடன் மன்னார் பிரதேச கலா மன்றங்கள் எடுத்த புலவர் அண்ணாவிமார் மகாநாட்டிலே பேராசிரியர் சு. வி. அவர்களின் பணி உச்ச நிலையை எய்தியதெனலாம். பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட அண்ணாவிமார் இன்றும் அவற்றை அணிந்து புளகிதங் கொள்வார்களாம். பாராட்டப்பட்ட புலவர்கள் வரிசையிலே திருவாளர்கள்: விருஸ் மொத்தம் கபிரிகேற், சு. மரிசாற் பிள்ளை, சூசை மனுவேல், அந்தோனி கிறிஸ்தோகு, சமியஸ் பிரகாசம், சவிசி சீமாம்பிள்ளை, வஸ்தியான், அந்தோனிப்பிள்ளை, அவுறன் செபஸ்தி யான் குருஸ் குறிப்பிடத்தக்கவர்கள். அண்ணாவிமார் வரிசையிலே திரு வாளர்கள்: அலக்சாந்தர் அலெஸ், அ. தேவசகாயம்பிள்ளை, ச. செ. வைத்தியர், லூயிஸ் அலோசியஸ் பெர்ணண்டோ, அரிப்புச் சந்தியோகு பக்திநாதன், பாவிலு பிலேசியான் சோசை, யோசம் இம்மனுவேல், கே. துரையப்பா, வஸ்தியான் செபமாலை, சந்தியோகு ஆரோக்கியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பு அடைக்கலம் என்போர் போற்றிக் கௌரவிக்கப்பட்டார்கள். தொடர்ந்து 1966இல் திருவாளர்கள் மீராசாய்பு முகமது காசிம் ஆலிம், கபிரியல் அந்தோனிப்பிள்ளை, கயித்தான் பரிகாரி இசைக்கேல், மரிசால் பிள்ளை பெஞ்சமின்பிள்ளை, மீராசாகிபு முகமது சாகிபு ஆகிய அண்ணாவிமார்கள் கௌரவிக்கப்பட்டவர்கள். இவ்விழாக்களில் தலைமைப் பேருரை நிகழ்த்தி பொன்னாடை போர்த்தி அண்ணாவிமாரைக் குளிர வைத்த பெருமைக்குரியவர் இன்றைய யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் 1969லும்1970இலும் கோலாகலமாக எடுத்த அண்ணாவிமார் மகாநாடுகள், கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டுமென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன. இவ்விழாக்களில் தலைமைதாங்கி பொன்னாடைகள் போர்த்திய பேராசிரியர் சு. வி. அவர்களின் கருத்துக்கள் நோக்கத்தக்கன:

> ''நாட்டின் கலைச்செல்வத்தை அழியவிடாது பாதுகாத்துவரும் அண்ணாவிமாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் மகத்தான செயலாகும். அதுவும் இக்கௌரவத்தை உள்ளூராட்சி மன்றங்கள் வழங்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்''

1969இல் நடந்த மகாநாட்டினைக் கண்ட பொதுமக்கள், பொதுமக்கள்கலையைப் பேணும் அண்ணாவிமார் ஊர்வலமாக மங்கல வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டுப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதைக் கண்டபோது பெருமிதம் கொண்டனர். இவ்விழாக்களில் திருவாளர்கள்: வேலாச்சி கதிர்காமத்தம்பி, வே. சீனித்தம்பி, வே. கந்தையா, த. செல்வராசா, சி. சின்னையா, சீ. சின்னையா, க. முத்துப்பிள்ளை, வ. நல்லதம்பி, பா. நாகமணிப்போடி, இ. தெய்வநாயகம், வ. கந்தப்பன், சீ. தங்கராசா, காசுபதி, த. நல்லதம்பி, சி. சதாசிவம், க. விநாயகம், செ. முத்துலிங்கம், க. தம்பிப்பிள்ளை, க. நோஞ்சிப்போடி, சி. குழந்தைவேல், தி. பொன்னம்பலம், வீ. வயிரமுத்து, க. செல்லையா, இ. முத்துலிங்கம், நா. ஞானமுத்து, சி. கிருஷ்ணபிள்ளை, ஜனாப் முகமது அலியார் முஸ்தாபா லெவ்வை, திரு. வினாசி வயிரமுத்து ஆகிய பிரபல அண்ணாவிமர்கள் கௌரவமும் பாராட்டும் பெற்றார்கள். இவர்களை எல்லாம் போற்றிப் புகழ்ந்து மக்கள் மனதில் மன்னர்களாக நிறுத்தி மகிழ்வெய்திய கலாநிதி சு. வி. அவர்கள் இவ்விழாக்கள் எடுக்கக் காரணகர்த்தாக்களாய் மிளிர்ந்த முக்கியத்தர்களில் ஒருவர். பாராட்டும் பண்பு இவரது இரத்தத்தோடு கலந்த நற்பண்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# மத்திய மாகாண

# சைவ மகா சபையிலே......

சைவமும், தமிழர் கலாச்சாரமும் மலையகத்திலே செழித்திட வேண்டுமென்ற இலக்குடன், சுவாமி விபுலாநந்த அடிகளாரால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட சபையே மத்தியமாகாண சைவ மகா சபையாகும். ஆண்டுதோறும் பெரு அரங்குகள் அமைத்து, விழாக்களைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறது இச்சபை. குருபூசைகளை, சமய விழாக்களை, சுவாமி விபுலாநந்தர், ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் ஆகியோரது ஞாபக விழாக்களை, விசேட தமிழ்ப் பண்டிகைகளை கண்டிமாநகரிலே பெருமளவிற் கொண்டாடிவருகிறது இச்சபை. பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைவராய்ப் பணிபுரிந்த பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தனிக் கொலுவுடன் சபை மிளிர்ந்தது.

'நாவலர் பெருமான் வளர்த்தது, சைவமா? தமிழா?' என்ற பட்டிமன்றம் எடுப்பான முறையில் நடந்தது. ''நாவலரின் பேச்சும் மூச்சும் சைவமே அன்றி வேறென்றில்லை'' என விரிவுரையாளர் திரு. தனஞ்சயராசசிங்கம் முழங்க, வாதம் சூடு பிடிக்கும் வகையிலே திரு. இரா. சிவலிங்கம் எம். ஏ. அவர்கள் நாவலர் தமிழ்மொழிக் காற்றிய தொண்டின் பட்டியலைக் கொடுக்கத் தொடங்கினர். ஆறு அறிஞர்களின் வாதப் பிரதிவாதங்களை, தலைமைதாங்கிய பேராசிரியர் சு. வி அவர்கள், மிக நுட்பமாக முடித்து வைத்தார். ''சைவமும் தமிழும் ஒட்டிப்பிறந்த குழந்தைகள்'' என்பது தலைவர் கூற்றாய் அமைந்தது. தலைமை தாங்கும் கலை தனித்துவமானது. பேச்சாளர்களை அளவாகப் பேசவைப்பது, உற்சாகமூட்டி விறு விறுப்பூட்டுவது, தலைமையுரையைப் பேருரையாக்காது ஆழமாக அதேவேளை அளவாகப் பேசுவது, சலிப்பற்ற வகையிலே கூட்டத்தை முடிவுக்குக் கொணர்வது எல்லாம் தலைமை தாங்குபவரின் பேராற்றலைப் பொறுத்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைப் பேச்சு கைவரப்பெற்ற காரணத்தால் கலாநிதி சு. வி. அவர்கள் தோற்றிய அரங்குகள் கலகலப்பாக அமைந்தன. 'கலைமகள்' ஆசிரியர் கி. வ. ஜகந்நாதன், குன்றக்குடி அடிகளார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பல பெரியார்கள் கலந்து கொண்ட பெருவிழாக்களில் தலைமைதாங்கி சுவையுடைய விழாக்களாக்கியவர் இவர். மேற்படி சபையின் நடனப்பிரிவு வருடாவருடம் எடுக்கின்ற நடன விழாக்கள் கொலுவாய் நிகழத் தலைமைதாங்கி தக்கன புரிந்தவர். சிங்களச் சிறுமியர்களே பரதம் பழக உந்திநின்றன இவ்விழாக்கள்.

# 10

## இவரைப்போல நாலுபேர் இருந்தால்......

கலைஞர்க்குப் பாராட்டா?
அங்கே அவர் குரல் ஒலிக்கும்.
தலைமை தாங்குதலா?
அது ஒரு தனிக்கலையாய் மிளிரும்.
நாடகத் தயாரிப்பா?
அது சுத்தமான தயாரிப்பாய் அமையும்.
கருத்தரங்குகளா?
தக்க வழிநடத்தல் நற்பயன் நல்கும்.
நிகழ்ச்சிகளிற் பங்குகொள்ள அழைக்கிறோமா?
புண்படுத்தும் பதில் இல்லை; 'ஆம்' என்ற பதிலே கிடைக்கும்.
மடல் வரைகிறோமா?
மறுதபாலிற் பதில் கிடைக்கும்.
அவரது மோட்டார் ரதம் ஓடுகிறதா?
அதில் அமர்ந்திருப்போரிற் பலர் கலை இலக்கியப் பிரமுகர்களே.
நாடகம் பார்க்கிறாரா?
முடிந்ததும் நடிகர் சந்திப்பு, கைகுலுக்குதல், நயவுரை நிகழும்.
அரங்கு சிறக்க நிதி திரட்டுதலா?
பெருமை பாராது பாதங்கள் படியேறி இறங்கும்,
கலைஞர்கள் மறைவா?
அநுதாபம் இரங்கலுரை இவரது உடன் கருமங்கள்.

ஆம். அரங்கு வளர்க்கப் பிறந்தவர் இவர். அரங்கைச் சுற்றிச் சுழல்பவர் இவர். இவரைப்போல நாலுபேர் இருந்தால்...... ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

10

# இவரைப்போல நாமும் இருக்க

[illegible]

UNIVERSITY OF PERADENIYA
1-8-1992
LIBRARY

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
1-8-1992
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ. ரி. பொ. வின்
## பிற ஆக்கங்கள்

இறுதிப் பரிசு......................(நாடகம்)
நாடகம்......... (பரிசு பெற்ற நாடகம்)
கூப்பிய கரங்கள்......(ஓரங்க நாடகம்)
பக்தி வெள்ளம்..........(ஓரங்க நாடகம்)
பாடசாலை நாடகம் ............(கட்டுரை)
கலையுலகில் கால்நூற்றாண்டு (கட்டுரை)

---

இந்நூல், சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு, மாவிட்டபுரம்-முத்தமிழ்க் கலைமன்றத்தினரால் 27-05-1984இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org